# வந்தவாசி நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

2022ம் ஆண்டு ஜனவரி மாதம் 24.01.2022– ம் நாள் திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

S. Murugesan 24.1.22

தனி அலுவலர்

**பொருள் எண். 1**

நகர்ப்புற உள்ளாட்சித்தேர்தல் 2022க்கு தேவையான – 2021–2022ம் ஆண்டிற்கு தேவையான இவ்வலுவலக உபயோக பொருட்கள் A4 பேப்பர் Legal பேப்பர், டோனர் 12A, சம்பளபதிவேடு, Chitta Tender Register போன்ற அலுவலக உபயோக பொருட்கள் கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான கார்த்திகா எண்டர் பிரைசஸ் சென்னை என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும், அவசர அவசியம் கருதி தோராய செலவினம் ரூ.5.00 (ரூபாய் ஐந்து இலட்சம்) மட்டும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

3. தேர்தல் பணிக்கு தேவையான பொருட்கள் அவசர அவசியம் கருதி தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1262/2022/எச்1)

தீர்மானம் எண்.210 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண். 2**

வந்தவாசி நகராட்சியில் ஒட்டுனராக பணிபுரிந்து பணியிடையில் காலமான திரு.ஜி.ஜி.வெங்கடேசன் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.J.புஷ்பா என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வந்தவாசி ஆணையாளர் மீது தொடர்ந்த வழக்கு, வழக்கு எண்.W.P.No.1725/2021 பெற்று விட்டது. மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரூ.20,000/– (இருபதாயிரம் மட்டும்) வழக்கறிஞர் Thiru.Lourdu Paul Maurya. B.A.B.L(Hons), ML., என்பவருக்கு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டுதல்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வழக்கு கட்டணம் ரூ.20,000/–ஐ வழக்கறிஞர் Thiru.Lourdu Paul Maurya. B.A.B.L(Hons), ML., என்பவருக்கு வழக்கு கட்டணம் ரூ.20,000/– வழங்கிட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 0482/2021/சி1)

தீர்மானம் எண்.211 (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண். 3**

வந்தவாசி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (SBM) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் G.F.C. Star Rating வழங்கும் பொருட்டு, வந்தவாசி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு பொது இடங்களை தவிர்த்து மற்ற பகுதிகளில் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளதால், வந்தவாசி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற சுய உறுதிமொழி (Self Declaration) அனுமதிக்கும், மன்ற தீர்மானத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 280/2022/எச்1)

**தீர்மானம் எண்.212** (அனுமதிக்கப்பட்டது)

**பொருள் எண். 4**

வந்தவாசி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (SBM) 24 வார்டுகளிலும் திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லை என்று (Open Defecation Free +) தூய்மையான பகுதியாக வந்தவாசி நகராட்சியை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அங்கீகாரம் பெற சுய உறுதிமொழி (Self Declaration) அனுமதிக்கும், மன்ற தீர்மானத்திற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.279 /2022/எச்1)

**தீர்மானம் எண்.213** (அனுமதிக்கப்பட்டது)

S. Muruga 24.1.22

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
வந்தவாசி நகராட்சி.